**புலமைச் சொத்து நிதியம் - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலமைச் சொத்து நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 6,330,865 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு கடந்த காலம் முழுவதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் அலுவலக பொருத்திகளின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக பிரச்சினையான நிலைமை | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அவ்வாறே இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் இந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்றதை மேலும் அறியத்தருகின்றோம். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்கம் மற்றும் 2022 திசெம்பர் 20 ஆந் திகதிய இலக்கம் 01/2020(ii) என்ற அரச நிதி சுற்றறிக்கை | சேவை வழங்கல்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் அதிகரிக்கப்படாத சகல அரசாங்க நிறுவனங்களினதும் கட்டணங்களை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், கட்டணங்களை திருத்துவதற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெற்று கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய கட்டணத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன் அதற்குரிய அமைச்சரவை குறிப்பின் வரைவு மற்றும் புதிய திருத்தப்பட்ட கட்டணத்தை உள்ளடக்கி வர்த்தமானி பத்திரம் 2023 ஏப்ரல் 12 ஆந் திகதி வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பபட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 முதலீட்டு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்தில் தொடர்ச்சியாக 04 மாதங்களில் ரூபா 10 மில்லியன் முதல் ரூபா 15 மில்லியனுக்கு இடையிலான வீச்சில் மீதியொன்று காணப்பட்டதுடன் மிகைப் பணத்தை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தின் நாளாந்த வருமான பெறுவனவு தேவையின் பிரகாரம் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு முடியுமான வகையில் காசு மீதியை பேணிச்சென்று அதன் பிரகாரம் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் மிகைப் பணத்தை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 174,567,112 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 68,822,100 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 105,745,012 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 118,552,063 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணியின் உரித்தை கையேற்காமல் புலமைச் சொத்து விற்பனை மேம்படுத்தல் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 22,298,752 ஆன செலவினம் செய்யப்பட்டு இருக்கும் போது அது சார்ந்த காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையேற்கப்பட்டிருந்தது. அந்த கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு முடியாமல் இருந்தது. | செலவிடப்பட்ட ரூபா 22,298,752 தொகையை மீளளிப்புச் செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட போதும் இதுவரை அந்தப் பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மீளளிப்புச் செய்யப்படாது இருந்ததுடன் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து அந்த பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்ட 273,083 வற் வரி தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி தொடர்பான கோவையில் 2016 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் எதிர்வரும் ஆண்டிற்காக தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டவுடன் இந்த தொகை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதாக உரிய நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | புவியியல் குறிகாட்டிகளை பதிவு செய்வதற்காக பிரமாணங்கள் அங்கீகரிக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் போது அந்த விண்ணப்பத்தை பதிவு | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக பொதுவான கடமைகளை பேணிச்செல்வதற்கு | பதிவு செய்வதற்கான பிரமாணங்களை அங்கீகரித்தல் விரைவாக மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இடையூறாக இருந்தது. தற்போது இறுதி வரைவு சட்ட வரைவு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் உள்ளது. | ல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பேடன்ட் அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 431 பேர்கள் கோரியிருந்ததுடன் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அதில் 05 பேடன்ட் அனுமதிப்பத்திரம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | 2023 மே 04 ஆந் திகதி வரையில் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த விண்ணப்பங்களில் 05 விண்ணப்பங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு விண்ணப்பம் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. | தாமதம் அடைந்தற்கான காரண விடயங்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வியாபார சின்னங்களை பதிவு செய்வதற்காக கிடைத்த 9465 விண்ணப்பபத்திரங்களில் 531 விண்ணப்பங்கள் அதாவது 5.6 சதவீதம் மாத்திரம் ஆரம்ப மற்றும் இரண்டாம் பரிசோதனைக்கு உட்படுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுகளில் கிடைத்த 8400 விண்ணப்பங்கள் அளவில் நடவடிக்கை எடுத்தமையினால் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த விண்ணப்பங்களில் ஆரம்ப மற்றும் இரண்டாம் பரிசோதனைகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைத்த வியாபார சின்னங்களை பதிவு செய்தல் 3640 இல் 557 பதிவு செய்தல்கள் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைத்த விண்ணப்பங்களில் ஆக இருந்ததுடன் சட்டத்தின் 118(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் விண்ணப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து 10 வருட காலம் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகின்றமைால் வியாபார சின்னங்களை பதிவு செய்கின்ற சந்தர்ப்பம் | தாமதம் ஏற்பட்டுள்ள பதிவுகளை விரைவுபடுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்று 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களின் அடிபப்டையில் அந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 2023 யூன் மற்றும் யூலை மாதங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| வரையிலும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடி தன்மை காணப்படவில்லை. | | |
| (ஈ) ஹேக் சர்வதேச உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரையான 04 வருட காலத்தில் செயற்திட்டத்தை ஆய்வு செய்வதற்கு கைச்சாத்திட்டிருந்த போதும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதனால் இலங்கைக்கு ஏற்படுகின்ற நலன்களின் நிலைமை தொடர்பாக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்தமை இனங்காணப்பட்ட போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வில் அந்த உடன்படிக்கைக்காக கைச்சாத்திடல் இலங்கைக்கு ஏற்படுகின்ற நலன் நிலைமை தொடர்பாக சரியான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்தது. | சாத்தியவள ஆய்வை விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியில் இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 877 இன் (2) (உ) இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் 2019 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை மாத்திரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட 2020 இன் அறிக்கை மற்றும் 2021 இன் செயலாற்றல் அறிக்கையும் எதிர்வரும் நான்கு வார காலத்தில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |